26.02.2026 OS.No.71/2012 DW1 Name :.**திலகவதி**

குறுக்கு விசாரணை

1. பி.சா.ஆ. 1 ஆவணத்தை என் கணவர் எழுதி வைத்தார். சொத்தை செல்விகரசியிடமிருந்து என் கணவர் கிரையமாக வாங்கினார். அந்த அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. பி.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என் கணவர் கிரைய ஆவணத்தின் படி சொத்தின் சுவாதீனத்தில் இருந்துள்ளார் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. பி.சா.ஆ.1 ஆவணத்தை எழுத என் கணவருக்கு உரிமை இல்லை என்றும் அவ்வாறு உரிமையில்லாத ஆவணத்தை என் கணவர் என் பெயருக்கு எழுதியுள்ளது சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல.
2. இந்த வழக்கில் என்னை உமாபதியின் வாரிசுதாரராக தான் சேர்த்துள்ளோம் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் எனக்கு தெரியாது. என் மகன் ஜீவா பருகூரில் குடியிருக்கிறார். என் மகள் ஆம்பூரில் குடியிருக்கிறார். நான் என்னுடைய மகன் மற்றும் மகள் வீட்டில் வசிக்கிறேன். தாவா சொத்தில் நான் எந்த காலத்திலும் சுவாதீனத்தில் இருந்தது இல்லை என்றால் சரியல்ல.
3. இ.ம.எண்.10/2024, 11/2024 உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை. அ.வ.எண்.129/2023 வழக்கில்

வாதிகள் தரப்பினர்களாக இல்லை என்றால் அது எனக்கு தெரியாது. இந்த வழக்கையும் அந்த வழக்கையும் என் மகன் ஜீவா தான் கவனித்து வருகிறார். முதல் விசாரணை பிரமாண பத்திரம் ஜீவா சொல்லி தயார் செய்யபட்டு நான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு நேரிடையாக தெரியாது. புஷ்பாவதி, நாராயணசாமி வாரிசு சான்றிதழ்கள் தாக்கல் செய்யவில்லை. முதன்மை சாட்சி வாக்குமூலம் பத்தி 8, 9 உள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4. செல்விகரசியின் சொந்த ஊர் காஞ்சிபுரம். பிரகாசம் என்பவருடன் திருமணம் முடித்து சிறிதுநாளில் பிரிந்து சென்றுள்ளார். 05.05.1983 தேதியிட்ட உயில் ஆவணம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. செல்விகரசி பெயரில் உள்ள ஆவணங்கள் வழக்கு சொத்தை அவர் அனுபவித்து வந்தார் என்பது தொடர்பான ஆவணங்கள் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் கணவர் அவற்றை தாக்கல் செய்துள்ளாரா என்ற விவரமும் எனக்கு தெரியாது.

5. செல்விகரசியின் மாமியார் இறந்த பின் அவருடைய குடும்பத்தில் சொத்து தொடர்பாக பிரச்சனை நடந்தது. அந்த பிரச்சனை தொடர்பாக ஊர் பெரியோர்கள் மூலம் பஞ்சாயத்து நடந்து அதற்காக ஆவணம் எழுதபட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த ஆவணம் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளபட்டு பதிவு செய்யபட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. அந்த ஆவணத்தின்படி வழக்கு சொத்து

சத்தியமூர்த்தி, ராகவேந்திரன் ஆகியோர்களுக்கு ஒதுக்கபட்டது என்றால் அதுபற்றி தெரியும்.

6. செல்விகரசி அவருக்கு கிடைத்த சொத்துகளை விற்றுள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது வழக்கு சொத்து சத்தியமூர்த்தி, ராகவேந்திரன் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் அதுபற்றி தெரியாது. அதன்பின் வழக்கு சொத்து குறித்து ஏற்பட்ட விக்கிரைய ஒப்பந்தம் மற்றும் கிரையம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. 1ம் வாதி பெயருக்கு வழக்கு சொத்திற்கான வரிவிதிப்பு பெயர் மாற்றம் செய்யபட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. 1ம் வாதி தான் வழக்கு சொத்திற்கு வரி செலுத்தி வருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது. அதன்பின் தானபத்திரபடி 3ம் வாதி பெயருக்கு வழக்கு சொத்திற்கான வரிவிதிப்பு மாற்றபட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது.

7. என் கணவர் ஏற்கனவே தாக்கல் செய்த வழக்குகள் தள்ளுபடி செய்யபட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த தீர்ப்பின்படி என் கணவர் உயிருடன் இருந்தவரை எந்த மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. என் கணவர் பெயருக்கு 2ம் பிரதிவாதி கிரைய ஒப்பந்தம் மட்டும் எழுதி கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. என்னுடைய முதன்மை வாக்குமூலத்தில் பத்தி 17ல் கூறியுள்ள சங்கதிகள் தவறானது என்றால் சரியல்ல. என் கணவர் தாக்கல் செய்துள்ள பதிலில் கிரைய ஒப்பந்தபடி வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் உள்ளதாக கூறியுள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது.

8. கிரைய ஒப்பந்தபடி என் கணவர் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. வழக்கு சொத்தில் என் கணவர் வளர்ச்சி

பணிகள் செய்துள்ளார் என்பதை காட்டகூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. என் கணவர் தாக்கல் செய்த பதிலில் பி.சா.ஆ.1 ஆவணம் பற்றி எதுவும் கூறவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. பி.சா.ஆ.1 ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யபட்டது என்பதால் அதன் பேரில் நான் எந்த உரிமையும் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணத்தின் படி என் பெயருக்கு வரிவிதிப்பு கட்டபட்டுள்ளதா என்பது என் மகனுக்கு தான் தெரியும்.

9. வழக்கு சொத்து குறித்து சுமார் 30 ஆண்டுகாலமாக வழக்குகள் நடத்தி வருகிறார். எந்த வழக்கிலும் பி.சா.ஆ.1 ஆவணத்தின்படி என்னை தரப்பினராக சேர்க்கவேண்டும் என நான் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி தெரியாது.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 26/02/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.02.26 16:13:14 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.